138

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்ப கல்வித் துறை நிகழ்ச்சித் திட்டம்

இறுதிப் பரீட்சை

**EPU 4531** – கற்றல் - கற்பித்தலில் முன்னோக்கு

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : **26/02/2023** நேரம்: பி.ப 01.30 – பி.ப 04.30

## பகுதி I

1. கல்வியைப் பற்றிய அரிஸ்ரோட்ரிலின் கருத்துக்களை சுருக்கமாக விளக்குக.

2. பிள்ளை மையக் கல்வியின் பண்புகள் நான்கினைக் (04) குறிப்பிடுக.

3. கடந்த கல்வி மறுசீரமைப்பில் புதுமுகத் தேர்ச்சிகளை (பிள்ளைகளை இனங்காணல்) அறிமுகம் செய்யப்பட்டதன் காரணங்களை சுருக்கமாக விபரிக்க.

4. அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளின் தொடர்ச்சித் தன்மை பற்றிய உமது கருத்து யாது?

5. ஆரம்ப கல்வியில் காணப்படும் தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தினைப் பற்றி சுருக்கமாக விபரிக்க.

6. மகிழ்ச்சிகரமான கற்றல் என்பதன் கருத்து யாது?

7. "முன்பிள்ளைப் பருவத்தில் விளையாட்டு" என்பதனை பொருத்தமான உதாரணத்துடன் வரையறுக்க.

8. டேலின் அனுபவக்கூம்பு என்பதனை வரைந்து விளக்குக.

**(5x8= 40 புள்ளிகள்)**

## பகுதி II

09.

i. மரியா மொண்டிசூரி அம்மையாரால் சிபாரிசு செய்யப்பட்ட 'முன்பிள்ளைப் பருவத்தினைப் பற்றிச் சிந்தித்தல்' என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. மரியா மொண்டிசூரி அம்மையாரின் கருத்துப்படி, முன்பள்ளி ஆசிரியர்கள் எவ்வாறு முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு ஏற்றவாறு பாடத்தை தயாரிக்கவேண்டுமென விளக்குக.

(10 புள்ளிகள்)

10.

i. இலங்கை முன்பள்ளிக் கல்வி தொடர்பான சமகாலப் பிரச்சினைகளைப் பட்டியலிடுக.

(10 புள்ளிகள்)

ii. உங்களால் முன்வைக்கப்பட்ட சமகாலப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் கைக்கொள்ளக்கூடிய உபாயங்களை முன்மொழிக.

(10 புள்ளிகள்)

11.

i. முன்பிள்ளைப் பருவக் கற்றலில் மகிழ்ச்சிகரமான கற்றலை உருவாக்கக்கூடிய காரணிகளை விபரிக்க.

(10 புள்ளிகள்)

ii. ஆரம்ப பிரிவிலுள்ள ஏதாவதொரு வகுப்பிற்கு பொருத்தமான கருப்பொருளினை தெரிவுசெய்க. இக் கருப்பொருளுக்கு ஏற்றதாக ஆசிரியரொருவர் ஊடாட்டமுள்ள மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்குவதில் ஆசிரியரின் வகிபங்கு எவ்வாறானதென விளக்குக.

(10 புள்ளிகள்)

12.

i. கற்றல் துணைகள் என்றால் என்ன? பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக.

(05 புள்ளிகள்)

ii. கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கில் கற்றல் துணைகளைப் பயன்படுத்தவேண்டியதன் முக்கியத்துவத்தினை விளக்குக.

(07 புள்ளிகள்)

iii. ஆரம்ப பிரிவில் இருந்து பொருத்தமான பாடமொன்றினைத் தெரிவுசெய்து அதற்குப் பொருத்தமான கற்றல் சாதனங்களின் பட்டியலை தயாரிக்க. நீங்கள் பட்டியலிட்ட சாதனங்களில் ஏதாவதொன்றை தெரிவுசெய்து அதனை எவ்வாறு தயாரிப்பீர்கள் என விளக்குக.

(08 புள்ளிகள்)

13.

i. பிள்ளைநேய கற்றல் சூழலை உருவாக்கும் போது நீங்கள் கட்டாயம் கவனத்தில்கொள்ள வேண்டிய பௌதீகத் தேவைகள், உளவியல் தேவைகள் என்பவற்றை பட்டியலிடுக.

(10 புள்ளிகள்)

ii. மாணவர்நேய கற்றல் சூழலை உருவாக்கும் போது பிள்ளைகளின் பௌதீகத் தேவைகள், உளவியல் தேவைகள் என்பவற்றை உறுதிப்படுத்தவேண்டியதன் முக்கியத்துவத்தினை விளக்குக.

(10 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது